# தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்தில் புதிய அறிவிப்புகள்! சட்டப்பேரவையில் அமைச்சர் எஸ்.முத்துசாமி பதிலுரை...

8 ஆம் பக்கத் தொடர்ச்சி

அவர்களுக்கும் கால அவகாசம் கொடுத்து, அதிலே ஏறத்தாழ 3,689 மனுக்கள் வந்தன. அதிலே 2,410 மனுக்கள் சம்பந்தப்பட்டவர்களுக்கு இப்பொழுது அனுமதி கொடுக்கப்பட்டிருக்கிறது. தேவை யென்றால் மேலும் அவர்கள் மனு அளிப்பதற்கான ஏற்பாடும் செய்யப்படுகிறது.

அதேபோல, சங்கங்கள். கட்டடம் கட்டுவது, நாம் நினைக்கிறோம் இது DEVELOP ERSக்கு மட்டும்தான் பயன்படும் என்று கருதுகிறோம். ஆனால், அப்படியல்ல. இதில் என்ன குறைபாடு, பிரச்சினைகள் இருந்தாலும், அந்தப் பிரச்சினைகள் கடைசியில் பயனாளிகள் தலையிலேதான் சுமத்தப்படுகிறது. எனவே, அதில் இருக்கிற இடர்பாடுகள் நீக்கப்பட வேண்டு மென்பதற்காக அவர்களை நாங்கள் நேரடியாக அழைத்துப் பேசினோம். ஏறத்தாழ 41 சங்கங்களிலிருந்து 120 பேர் வந்திருந்தார்கள். அவர்கள் 43 கோரிக்கைகள் வைத்தார்கள். அந்தக் கோரிக்கைகளிலே, நியாயம் என்று கருதப்படும் 22 கோரிக்கைகளை நிறைவேற்று வதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டு, பல கோரிக்கைகள் நிறைவேற்றப்பட்டிருக்கின்றன. சில கோரிக்கைகள் CONSULTANT மூலமாக அவர்களிடத்திலே கருத்துக்களைப் பெற்று செய்ய வேண்டிய அவசியம் இருக்கிறது. அதுவும் செய்வதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது என்பதை நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். அதிலே சிலவற்றை சொல்ல வேண்டுமென்று சொன்னால், தொடர் கட்டுமானப் பகுதி (CONTINUOUS BUILTUP AREA) பல இடங்களிலே, குறிப்பாக மதுரை போன்ற பெருநகரங்கள், பழைய நகரங்களிலே இருக்கிற மனையினுடைய அகலம் குறைவாக இருக்கும். ஆனால், நீளம் பெரிய அளவிலே இருக்கும். எனவே, அவர்கள் இந்த சட்ட திட்டங்களை கடைபிடித்து அந்தக் கட்டடத்தை கட்ட முடியாத நிலை. எனவே, அவர்கள் தொடர் கட்டுமானமாக கட்டிக் கொள்ளலாம் என்று சில வழிமுறைகள், விதிமுறைகள் அதற்காக வகுக்கப்பட்டு, இப்பொழுது அந்த இடத்தைக் கண்டுபிடித்து, அதற்கான ஏற்பாட்டை நாங்கள் செய்தி ருக்கிறோம். அது இப்பொழுது நடைமுறையிலே கொடுக்கப்படுவதற்கான ஏற்பாடு நடந்திருக்கிறது. அவர் எங்கே இருந்தாலும், எப்பொழுது வேண்டுமானாலும் அதைக் கொடுப்பதற்கான ஏற்பாட்டை நாம் கண்டிப்பாகச் செய்யலாம் என்பதை நான் இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

அதேபோல, CC கொடுப்பது, CC COMPLETION CERTIFICATE கொடுக்கின்றபொழுது, அவர்கள் அதற்காக ஒரு தொகை கட்டியிருப்பார்கள். எனவே, அது கொடுப்பதிலே மிகுந்த காலதாமதம் ஏற்படுகிறது என்று சொன்னார்கள். அது உடனடியாக கொடுக்கப்பட வேண்டுமென்று நாங்கள் அரசு அதிகாரிகளுக்கு தெரிவித்திருக்கிறோம். அதுப்பிரகாரம் அது நடந்து கொண்டிருக்கிறது. அதேபோல, பட்டாவைப் பொறுத்த வரை தோராயப் பட்டா, நிரந்தரப் பட்டா என்றிருக்கிறது. இதனை வேறுபடுத்திக் கொண்டிருந்தார்கள். அதை வேறுபடுத்தாமல் ஒரே மாதிரியாக கருத வேண்டுமென்றும் சொல்லப்பட்டிருக்கிறது.

**சட்டதிட்டங்கள் கடைபிடிக்க வேண்டும்!**

அதேபோல, அணுகு சாலை. இதிலே சில சிக்கல்கள் இருந்தன. அதிலே, இப்போது மாநகராட்சியிலே 7 மீட்டராக இருக்க வேண்டும். TOWN PANCHAYATலே 6 மீட்டராக VILLAGE PANCHAYATலே 6 மீட்டராக இருக்க வேண்டுமென்று இப்பொழுது ஒரு வழிமுறையைச் செய்திருக்கிறோம். அதிலே ஓரளவிற்கு திருப்தி ஏற்பட்டிருக்கிறது என்பதையும் இந்த நேரத்திலே நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். அதேபோல கட்டிமுடிக்கப்பட்ட முடிவுச் சான்றிதழ் எதற்கு தேவையில்லை என்றால், பெரிய கட்டடங்களுக்கு கண்டிப்பாக தேவை, அதிலே சிறிய மாற்றங்கள் இருந்தாலும் DEVIATION இருந்தாலும் அவர்களுக்கு அதிலே கொடுக்க முடியாது. ஆனால், 750 சதுர மீட்டருக்கு உள்ளே இருக்கிற கட்டடம், 8 KITCHENS இருந்தால், 8 KITCHENSக்கு உள்ளே இருந்தால் அவர்கள் CC வாங்க வேண்டிய அவசியமில்லை. ஆனால் கண்டிப்பாக சட்ட திட்டங்கள் கடைபிடிக்கப்பட்டிருக்க வேண்டும். அவர்கள் அதற்காக நேரம் ஒதுக்கி சிரமப்பட வேண்டா மென்பதற்காக அந்த சலுகை கொடுக்கப்படுகிறதேயொழிய சட்டத்தை மீறி எப்படி வேண்டுமானாலும் கட்டிக்கொள்ளலாம் என்பதற்காக அல்ல. அதை கடைபிடிக்க வேண்டுமென்பது பொதுமக்களினுடைய நலனைக் கருதி.

ஒரு SETBACK இருக்க வேண்டும் என்று எதற்காக சொல்கிறோம் என்றால், அது FIRE SERVICEக்கோ, போக்குவரத்திற்கோ தேவைப்படுகிறது. எனவேதான், சட்ட திட்டங்களை கண்டிப்பாகக் கடைப்பிடிக்க வேண்டும் என்று நாங்கள் சொல்கிறோம். ஆனால், அதனை வெளியிலே, இதற்கு CC தேவையில்லை, எப்படி வேண்டுமானாலும் கட்டிக் கொள்ளலாம் என்று எடுத்துக்கொள்ளக் கூடாது என்பதை நான் இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

அதேபோன்று MULTISTOREYED BUILDING அல்லாமல், கீழேயிருக்கிற BUILDING 12 மீட்டர் உயரத்தில் இருக்க வேண்டும் என்று இருந்தது. அந்த 12 மீட்டர் என்பது மிகவும் சிரமமாக இருக்கிறது. ஏனெனில், சில FLOORஐ கூடுதலான உயரத்தில் அமைக்க வேண்டியுள்ளது. எனவே, அதனை 14 மீட்டராக உயர்த்த வேண்டும் என்று நீண்ட காலமாக கோரிக்கை வைத்துக் கொண்டிருந்தார்கள். எனவே, முதலமைச்சர் அவர்கள், அது நியாயமான கோரிக்கையாக இருக்கிறது; அதைச் செய்து கொடுங்கள்; மற்ற விதிமுறைகளை எந்தக் காரணத்தைக் கொண்டும் மாற்ற வேண்டாம்; உயரத்தை மட்டும் 14 மீட்டராக உயர்த்திக் கொடுங்கள் என்று கூறினார்கள். உதாரணத்திற்குச் சொல்ல வேண்டுமென்றால், நாமக்கல்லில் மிகப்பெரிய பிரச்சினைகள் ஏற்பட்டன. இதன் உயரத்தை மாற்றிய பிறகு, பலபேர் அந்தப் பிரச்சினையிலிருந்து வெளிவருகின்ற ஒரு நிலை ஏற்பட்டிருக்கிறது என்பதை இந்த நேரத்தில் நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகின்றேன்.

பொதுப் பணித் துறையின் சார்பாக நீர் நிலைகளிலிருந்து அனுமதி பெறுவதில் நிறைய பிரச்சினைகள் இருந்தன. தற்போது சிறிய வாய்க்கால்கள் என்றால் 1 மீட்டர், ஏரி, குளம் என்றால் 3 மீட்டர், ஆறு, RIVER என்றால் 15 மீட்டர் என தள்ளி இருந்தால், அதில் பிரச்சினையில்லா மல்—அவர்களுக்கு அனுமதியைக் கொடுப்பதற்கான ஏற்பாடுகளும் செய்யப்பட்டிருக்கின்றன என்பதை நான் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். அதேபோன்று, மொத்தமாக ஒரு கட்டுப்பா ட்டைக் கொண்டுவர வேண்டும், ஒரு திட்டமிட்ட வரைவு இருக்க வேண்டும் என்பதற்காக தமிழ்நாடு 12 மண்டலங்களாக பிரிக்கப்பட்டி ருக்கின்றன. அவற்றில், இரண்டு மண்டலங்கள் CMDAன்கீழ் வந்துவிடும்; மீதமுள்ள 10 மண்டலங்கள் வெளியிலே இருக்கின்றன. அதற்காக 59.84 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டு, பணிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன.

**முழுமைத் திட்டம் என்றொரு திட்டம்;**

எந்தெந்த இடத்திலே என்னென்ன வர வேண்டும் என்பதைக் குறிப்பிட்டுச் சொல்வதற்காக, அது சுலபமாக இருக்க வேண்டும் என்பதற்காகக் கொண்டுவரப்பட்டிருக்கிறது. 135 இடங்களை முழுமைத் திட்டத்தின்கீழ் கொண்டு வருவதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டிருக்கி ன்றன. ஏற்கெனவே இந்தத் திட்டத்தின்கீழ் தமிழ்நாடு முழுவதும் 7 சதவிகித பரப்பளவு தான் இருந்தது; இப்போது 19 சதவிகிதமாகக் கொண்டு வரப்பட்டிருக்கிறது; அதனை 22 சதவிகிதமாகக் கொண்டு வருவதற்கான நடவடிக்கை கள் எடுக்கப்பட்டிருக்கின்றன. இதன்மூலமாக ஒரு திட்டமிட்ட வளர்ச்சியை நம்மால் கொண்டுவர முடியும் என்பதற்காகத்தான் இந்த ஏற்பாடுகளை நாங்கள் செய்து கொண்டிருக்கிறோம்.

நகர்ப்புற வளர்ச்சிக் குழுமம்; இங்கே எப்படி CMDA இருக்கின்றதோ, அதேபோன்று, கோவை, திருப்பூர், ஓசூர், மதுரை, சேலம், திருச்சி ஆகிய இடங்களில் இதனைக் கொண்டுவருவதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு, அதற்கான பணிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன.

**அதிகாரப் பகிர்வு;**

எல்லாவற்றிற்கும் HEAD OFFICEக்கு வந்து செல்ல வேண்டும்! அரசிடம் வந்து செல்ல வேண்டும் எனும்போது, பல பிரச்சினைகள் அவர்களுக்கு உருவாகின்றன. எனவே, 10 ஆயிரம் சதுர அடிக்கு உள்ளே இருக்கின்ற வீட்டுக் கட்டடங்களுக்கு, குடியிருப்புக் கட்டடங்கள் 10 ஆயிரம் சதுர அடிக்குக் கீழேயிருந்தால், உள்ளாட்சி அமைப்பு களே அனுமதியைக் கொடுத்துக் கொள்ளலாம். அதே போன்று, வணிக வளாகங்கள் 2 ஆயிரம் சதுர அடிக்குக் கீழே யிருந்தால் அவர்களே அனுமதியைக் கொடுத்துக்கொள்ளலாம். அதற்காக வேறு எங்கேயும் வரத் தேவையில்லை.

அதேபோன்று, வீடுகள் என்றால் 40 ஆயிரம் சதுர அடியில் இருந்தால், வணிகக் கட்டடங்கள் என்றால் 40 ஆயிரம் சதுர அடியில் இருந்தால், மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகத்தில் அதற்கான அனுமதியைப் பெற்றுக்கொள்ளலாம். இதனால், கால விரயம் ஏற்படுவதிலிருந்து அவர்கள் காப்பாற்றப்படுகிறார்கள்; பல பிரச்சினைகளிலிருந்து அவர்கள் காப்பாற்றப்படுகிறார்கள். எனவே, இதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டிருக்கின்றன.

நான் தொடர் கட்டுமானத்தைப் பற்றி ஏற்கெனவே சொல்லியிருந்தேன். தற்போது, பல இடங்கள் கண்டறியப்பட்டு, அதிலே இத்திட்டத்தை செயல்படுத்துவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டிருக்கின்றன. அதிலே வேறு ஏதாவது செய்யப்பட வேண்டியிருந்தால், உறுப்பினர்கள் அதுகுறித்து எங்களுக்குத் தெரிவித்தால், அதற்கான ஏற்பாடுகளை நிச்சயமாக நாங்கள் மேற்கொள்வோம் என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன். சுயசான்று கொடுத்து அவர்களே கட்டிக் கொள்ளலாம் என்று நாங்கள் சொன்னதில், உயரம் 7 மீட்டர் இருக்க வேண்டும் என்று வைக்கப்பட்டிருக்கிறது. அதுபற்றி இப்போது நாங்கள் ஆய்வு செய்து கொண்டிருக்கிறோம். அதற்குக் கீழே வண்டி மற்றும் வாகனங்களை நிறுத்துவதற்கான ஏற்பாடுகளைச் செய்யலாமா என்பது குறித்த கருத்து ஆய்விலே இருக்கிறது. அதனை ஆய்வு செய்து, அதற்கான நடவடிக்கையையும் நாங்கள் கண்டிப்பாக எடுப்போம் என்பதைத் தெரி வித்துக்கொள்கிறேன்.

தொழிற்சாலைகள் சார்பாக 595 மனுக்கள் எங்களுக்கு வந்தன; அவற்றில் 539 மனுக்கள் தொடர்பாக அனுமதி கொடுக்கப்பட்டு, தீர்வு செய்யப்பட்டிருக்கின்றன. முதலமைச்சர் அவர்களுடைய தலைமையில் TAMIL NADU GLOBAL INVESTORS MEET நடைபெற்றது.

அதிலே பல பேர் அனுமதி பெறுவதற்காக அவர்களுக்கு அந்த அவசியம் இருக்கிறது. எனவே, அதையெல்லாம் தனி கவனம் எடுத்து, அவர்களுக்கு உடனடியாகச் செய்து கொடுக்க வேண்டுமென்று துறையினுடைய சார்பாக நடவடிக்கை எடுத்து, அவர்கள் அதனை செய்துக் கொண்டி ருக்கிறார்கள். அதேபோல், பணியாளர்கள் மிகவும் SHORTAGE இருந்தது. அவை ஏறத்தாழ நிரப்பப்பட்டி ருக்கின்றன. மாவட்டங்களில் அலுவலகங்கள் கட்டுவதில், போதிய இடத்தில் கட்டடங்கள் இல்லாமல் இருந்தது. தற்போது அதற்காக ரூ.60 கோடி ஒதுக்கி, அதனை செய்வதற்காகவும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது. அதேபோல், தமிழ்நாடு கட்டுமானம் மற்றும் மனை விற்பனை ஒழுங்குமுறை குழுமம்இதன் மூலமாக சில கட்டுப்பாடுகள் வைக்கப்பட்டிருக்கின்றன. இதில் என்ன காரணம் என்று சொன்னால், மனையை வாங்கக்கூடிய வர்கள் அது தகுதியானது தானா, எல்லா சட்டத் திட்டங்களுக்கும் உட்பட்டிருக்கிறதா என்பதை அவர்கள் ஆய்வு செய்து அதற்கான அனுமதியைக் கொடுக்கிறார்கள். எனவே, அப்படி ஏறத்தாழ 20,767 மனுக்கள் இந்த அரசு வந்த பிறகு செய்திருக்கிறது. அதற்கு முன்பு, 2,421 மனுக்கள் தான் பரிசீலிக்கப்பட்டு, அனுமதி கொடுக்கப்பட்டது. இப்போது 20,767 மனுக்கள் கொடுக்கப்பட்டிருக்கின்றன. எனவே, இந்தத் துறையினுடைய சார்பாக இவ்வளவு பணிகள் செய்யப்பட்டி ருக்கின்றன. மேலும் பல பணிகள் செய்வதற்கான நடவடிக்கைகள் எடுத்துக்கொண்டிருக்கிறோம் என்பதை நான் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம் ஏறத்தாழ 4,46,600 அலகுகள்வீடு, மனைகள் ஆகியவற்றை இதுவரை DEVELOP செய்துக் கொடுத்திருக்கிறார்கள். அதிலேயும் பணியாளர்கள் SHORTAGE இருந்தன. அவையெல்லாம் தற்போது சரி செய்யப்ப ட்டிருக்கிறது. விற்பனைப் பத்திரத்தைப் பற்றி ஏற்கெனவே சொன்னார்கள். அதைப்பற்றி முதலமைச்சர் அவர்கள் ஓர் ஆய்வுக் கூட்டத்தைக் கூட்டி, அதில் சொல்லி, தனி முகாம்கள் நடத்தி, ஏறத்தாழ 15,890 பேருக்கு அந்த முகாம்கள் மூலமாக விற்பனைப் பத்திரம் வழங்கப்பட் டிருக்கிறது. அவர்களுக்கு விற்பனைப் பத்திரம் கிடைக்காமல் இருந்தால், அது அவர்கள் சரியான தகவல்களை கொடுக்காமல் இருக்கின்றார்கள் என்று அர்த்தம். எனவே, அதற்கான ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. அதேபோல் விற்கப்படாமல் இருக்கின்ற மனைகள் 7,482. ஆனால், அது ஒரு பெரிய பிரச்சினையல்ல. அந்த மனைகளைப் பொறுத்தவரை விலை ஏறிக்கொண்டேயிருக்கும். அதனால் நம்முடைய வீட்டு வசதி வாரியத்திற்கு அதில் பெரிய பிரச்சினை யில்லை. ஆனால் வீடுகளில், தனி வீடாக 141 வீடுகள் விற்கப்படாமல் இருக்கின்றன. அதேபோல், அடுக்குமாடி குடியி ருப்புகள் 3,801 வீடுகள் இருக்கின்றன. எனவே, அதில் தற்போது நாம் 200 வீடுகளை சட்டமன்ற உறுப்பினர்களுக்கு எடுத்துக்கொண்டாலும்கூட அதனை குறைத்துவிடலாம். மீதமிருப்பதை மட்டும் நாங்கள் விற்றால் போதும். இதிலே விற்பதற்கு காலதாமதம் ஏற்பட்டால், அதனையெல்லாம் வாடகை வீடுகளாக மாற்றிவிடலாம் என்று சொல்லி, அதற்கான நடவடிக்கையும் இப்போது எடுத்துக்கொண்டிருக்கிறோம் என்பதை நான் இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

## ரூ.57 இலட்சம் திட்ட மதிப்பீட்டில் பாதுகாப்பு அறையுடன் கூடிய இரும்பு பெட்டகங்கள்

## 10 கூட்டுறவு வீட்டு வசதி சங்கங்களில் அமைக்கப்படும்!

**புதிய வீடாக கட்டித்தரப்படும்!**

அடுத்து, ஏற்கெனவே வீட்டு வசதி வாரியத்தினுடைய சார்பாக அல்லது தனியாருடைய சார்பாக கட்டி விற்கப்பட்ட மாடி வீடுகள். அதிலே நூற்றுக்கணக்கான வீடுகள் ஒரே வளாகத்தில் இருக்கும். எனவே, அவர்களுக்கு தனியாக அந்த உரிமம்; அவர்களுக்கு எந்த RIGHTSம் சரியாக இல்லாமல், ஏதோ சங்கத்தை அவர்களாகவே உருவாக்கிக் கொண்டிருந்தார்கள். அதற்கு, முதலமைச்சர் அவர்கள் ஆய்வு செய்து, தமிழ்நாடு குடியிருப்போர் உரிமை சட்டம், அதற்காக ஒன்றை ஏற்படுத்தி அந்தச் சட்டம் இப்போது உருவாக்கப்பட்டு, அது சட்டமன்றத்தில் நிறைவேற்றப்பட்டு, அதற்கான சட்டத்திட்டங்கள் இப்போது வகுக்கப்பட்டு வருகிறது. இது எதற்காக என்று சொன்னால், பல கட்டடங்கள் பழுதடைந்துவிட்டன. அவற்றையெல்லாம் REDEVELOP செய்ய வேண்டியிருக்கிறது; மறு கட்டுமானம் செய்ய வேண்டியிருக்கிறது. அவர்கள் வந்து எங்களிடத்திலே பேசிக் கொண்டிருக்கிறார்கள். அதிலே பல ஆயிரக்கணக்கான குடும்பங்கள் சிரமப்பட்டுக் கொண்டிருக்கின்றன. அந்த வீட்டைவிட்டு வெளியே சென்று விட்டார்கள். எனவே, இந்தச் சட்டம் அதனை செய்வதற்கு துணையாக கொண்டு வரப்பட்டிருக்கிறது. எனவே, அந்த வகையிலே அதற்கான ஏற்பாடும் செய்யப்பட்டு வருகிறது. அதேபோல், இங்கே கேட்டார்கள். அரசு அதிகாரிகளுக்கான குடியி ருப்பு; இதில் 140 இடத்தில் குடியிருப்புகள் இருக்கின்றன. அதிலே ஏறத்தாழ 60 வளாகங்களிலிருக்கிற வீடுகள் அனைத்தும் பழுதடைந்து ஏறத்தாழ 10,000 வீடுகள். ஏறத்தாழ 22,953 வீடு; அதில் 10,000 வீடுகள் பயனற்றதாகச் சென்றுவிட்டது. தற்போது அவற்றையெல்லாம் இடிப்பதற்கான ஏற்பாடு செய்யப்பட்டு, பல இடங்களில் இடிக்கப்பட்டிருக்கிறது. அதிலே புதிதாகக் கட்டுவதற்கான ஏற்பாடும் செய்யப்படுகிறது. நான் ஏற்கெனவே கடந்த கூட்டத்திலேயே சொல்லியிருந்தேன். அங்கே 100 வீடுகள் இருந்தால், இப்போது கண்டிப்பாக 200, 250 வீடுகள் கட்ட முடியும். எனவே, அதன் காரணத்தால், பல பேருக்கு கூடுதலாக வீடு கிடைப்பதற்கான ஏற்பாடு செய்யப்பட்டு வருகின்றது. இப்போது பல திட்டங்கள் நிறைவேற்றப்பட்டு வருகின்றன. நான் நேரம் இல்லாத காரணத்தால், மொத்தமாக 3,967 அலகுகள், அதாவது இடமோ, வீடுகளோ மொத்தமாக 3,967 வேலைகள் நடைபெற்று வருகின்றன.

அதனுடைய மதிப்பீடு ரூ.1,955 கோடி. எனவே, வீட்டு வசதி வாரியத்தினுடைய சார்பாக இந்தப் பணிகள் நடந்து கொண்டிருக்கிறது. இதுவெல்லாம் இந்த மக்களுடைய நிலையை கருதி அவர்களுக்கு பயன்படுகிற வகையிலே இருக்க வேண்டும். புதிதாக எந்த இடத்திலே வீடு கட்டுவதாக இருந்தாலும், அங்கு இருக்கிற மக்களுக்கு அதிலே விருப்பம் இருக்கிறதா? அது வேண்டுமென்று நினைக்கிறார்களா என்பதையெல்லாம் ஆய்வு செய்து அதற்கு பின்னால்தான் செய்ய வேண்டும். நாம் எப்படி வேண்டுமானாலும் நினைத்துக்கொண்டு சென்று செய்துவிடக் கூடாது என்பதிலே துறையினு டைய சார்பாக ஒரு முடிவு எடுத்து, அதை ஆய்வு செய்கிறார்கள். அடுத்தது, கூட்டுறவு வீட்டு வசதி சங்கங்கள். இந்த சங்கங்கள் ஏறத்தாழ 1,173 சங்கங்கள் இருக்கின்றன. 728 சங்கங்கள்தான் அதிலே இயங்கி கொண்டிருக்கின்றன. மற்றவையெல்லாம் இயங்காமல் இருக்கின்றன. இதிலே நிறைய உறுப்பினர்கள் கடன் வாங்கியிருந்தார்கள். அதிலே பல சலுகைகளை முதலமைச்சர் அவர்கள் சொன்னதன் அடிப்படையிலே செய்து, ஏறத்தாழ 7,164 பேர்களுக்கு அந்த ஆவணங்கள் திருப்பி கொடுக்கப்பட்டுள்ளன. பல கோடி ரூபாய் அவர்களுக்கு அதிலே கடன் தள்ளுபடி செய்யப்பட்டு, வட்டி தள்ளுபடி செய்யப்பட்டிருக்கிறது. அதைப்போல, புதியதாக பல திட்டங்களை செய்வதற்கான முயற்சிகளை அந்தந்த சங்கங்கள் எடுத்துக்கொண்டிருக்கின்றன. அவர்களுக்கு முழுமையாக துறையினுடைய சார்பாக நாங்கள் ஆதரவை கொடுத்துக் கொண்டிருக்கிறோம் என்பதை நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். அதற்கடுத்து, தமிழ்நாடு முதலமைச்சர் அவர் களுடைய தலைமையிலே இயங்கும் சென்னை ஒருங்கிணைந்த பெருநகர போக்குவரத்துக் குழுமம். இதிலே பல பணிகளை அவர்கள் மேற்கொண்டு செய்து கொண்டிருக்கிறார்கள். மிகவும் முக்கியமான பணிகளாக, அதாவது அனைத்து போக்குவரத்து துறைகளையும் ஒருங்கிணைப்பதற்கான நடவடிக்கைகளை அவர்கள் எடுக்கிறார்கள். அதைப்போல போக்குவரத்து நெரிசலை குறைப்பதற்காக என்னென்ன செய்ய வேண்டும் என்ற திட்டத்தையும் ஆய்வு செய்து அவர்கள் நமக்கு கொடுக்கிறார்கள். அதைப்போல சரக்கு போக்குவரத்து, அதிலேயும் பல சிக்கல்கள் இருக்கின்றன. அதிலேயும் ஆய்வு செய்து அவர்கள் கொடுக்க இருக்கிறார்கள். அடுத்தது, ஒருங்கிணைந்த பயணச் சீட்டு பயணம். அதாவது, TRAINலும் பயணம் செய்யலாம், BUSலும் பயணம் செய்யலாம். இப்படி அதை ஒருங்கிணைத்து ஒரு TICKET வாங்கிவிட்டால், அதிலே செல்வதற்கான நடவடிக்கை. அதையும் அவர்கள் செய்து கொடுப்பதற்கன ஏற்பாட்டைச் செய்து, அதுவும் இப்பொழுது ஆய்விலே இருக்கிறது. அது விரிவாக நடைமுறைக்கு வர இருக்கிறது. மாணவர்களுக்கு பாதுகாப்பான பயண சேவை. இப்படி ஒவ்வொன்றையும் ஒவ்வொரு தலைப்பிலேயும் அவர்கள் எடுத்து செய்து கொண்டிருக்கிறார்கள். சென்னையிலே வாகனம் நிறுத்துகிற அந்த இடங்களை ஆய்வு செய்து, அதிலே குறைபாடுகளை தீர்ப்பதற்கான நடவடிக்கையும் இந்த அமைப்பின் மூலமாக செய்கிறார்கள். இப்படி பல நடவடிக்கைகள் அவர்கள் எடுத்துக் கொண்டிருக்கிறார்கள் என்பதை நான் இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

அதேபோல, மதுவிலக்கு. மனம் திருந்திய அவர்களுக்கு ரூ.30,000 கொடுத்துக் கொண்டிருந்ததை ரூ.50, 000 ஆக உயர்த்துவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. விழிப்புணர்வை பற்றி ஏற்கெனவே இங்கே பேசினார்கள். சிலம்பம் 1,600 இடங்களிலே நடத்தப்பட்டு, அதிலே 9 இலட்சத்து 60 ஆயிரம் பேர் கலந்து கொண்டார்கள். அது உலக சாதனை RECORDல் வந்திருக்கிறது. அதைப்போல, முதலமைச்சர் அவர்கள் 1182023ல் கலந்து கொண்ட ஒரு உறுதிமொழி ஏற்பது. அதிலே 80 இலட்சம் பேர் பள்ளி மாணவ மாணவிகள் கலந்து கொண்டு அதுவும் WORLD RECORDல் இன்றைக்கு இடம் பெற்றிருக்கிறது. எனவே, விழிப்புணர்வை செய்வதற்கு அவ்வளவு நடவடிக்கைகளை நாம் எடுத்துக் கொண்டிருக்கிறோம் என்பதை நான் இந்த நேரத்திலே தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். பல நடவடிக்கைகள் இந்த துறையினுடைய சார்பாக எடுக்கப்பட்டு கொண்டிருக்கிறது. எனவே, TASMACஐ பொறுத்தவரை, இப்பொழுது புதிதாக முதலில் நாங்கள் பேசுகிறபோது சொன்னார்கள். அதிலே இருக்கிற 23 ஆயிரம் தொழிலாளிகளுக்கு பல பிரச்சினைகள் இருந்தன. அதையெல்லாம் தீர்ப்ப தற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது. எனவே, எங்கு சின்ன, சின்ன தவறுகள் நடைபெறுகிறது என்று சொன்னால், உடனடியாக நடவடிக்கை எடுக்கிறோம். அது ஏறத்தாழ அது ஒரு கட்டுப்பாட்டிற்குள் வந்திருக்கிறது என்பதை நான் இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். எனவே, இவைகளையெல்லாம் செய்து, இந்தத் துறையினுடைய சார்பாக உரிய நடவடிக்கை எடுத்து நல்ல திட்டங்கள் மக்களுக்கு சென்று சேரும் வகையிலே செய்கிறோம் என்பதை தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். பேரவைத் தலைவர் அவர்களே, விரைவாக முடிக்க வேண்டுமென்று என்று சொல்லுகின்ற காரணத்தால், அறிவிப்புகளைப் பொறுத்த வரை புத்தகமாக கொடுத்துவிடுகிறோம். படித்ததாகக் கருதி நீங்கள் குறிப்பிலே ஏற்றிக்கொள்ள வேண்டும் என்ற என்னுடைய வேண்டுகோளை வைத்து என்னுடைய உரையை முடிக்கிறேன். உங்களை நான் வேண்டி கேட்டுக்கொள்வது, நீங்கள் கொடுத்த வெட்டுத் தீர்மானங்கள் அத்தனைக்கும் நாங்கள் நடவடிக்கை எடுக்கிறோம் என்கிற உத்தர வாதத்தை கொடுத்து கொள்கிறேன்.

எனவே, உறுப்பினர்கள் தாங்கள் கொடுத்துள்ள வெட்டுத் தீர்மானங் களைத் திரும்பப் பெற்றுக்கொண்டு, மானியக் கோரிக்கைகளை நிறைவேற்றித் தர வேண்டுமென்று இந்த நேரத்திலே நான் கேட்டுக்கொள்கிறேன். நன்றி, வணக்கம்.

**அறிவிப்புகள்**

**வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை**

1. நகர் ஊரமைப்பு இயக்ககத்தை மதிப்பீடு செய்து வலுப்படுத்தவும், நகர்ப்புற வளர்ச்சி குழுமங்கள் சிறப்பாக செயல்படுவதற்கு முழுமையான நிருவாக அமைப்பை ஏற்படுத்தவும், பொது மக்களுக்கு எளிய முறையில் சேவைகளை வழங்கிட தொலைநோக்கு செயல்திட்டத்தை உருவாக்க ஆய்வு மேற்கொள்ளப்படும்

நகர் ஊரமைப்பு இயக்ககத்தை மறுசீரமைத்து வலுப்படுத்தவும் நகர்ப்புற வளர்ச்சி குழுமங்கள் சிறப்பாக செயல்படுவதற்கு முழுமையான நிருவாக அமைப்பை ஏற்படுத்தி, பொது மக்களுக்கு எளிய முறையில் சேவைகளை வழங்கிட தொலைநோக்கு செயல்திட்டம் உருவாக்கப்படும்.

2. அங்கீகரிக்கப்பட்ட மனைப் பிரிவுகளை புவியியல் தகவல் முறையில் புவிசார் கூறுகளைக் கொண்டு மக்கள் பயன்பாட்டிற்கான இணைய செயலி உருவாக்கப்படும்

ஒற்றைச் சாளர முறையின்மூலம் ஒப்புதல் அளிக்கப்பட்ட மனைப்பிரிவு வரைபடம் புவிசார் தகவல் முறையுடன் ஒருங்கிணைத்து புவிசார் கூறுகளுடன் இணைய செயலி உருவாக்கப்படும். இது மக்கள் ஒப்புதல் விவரம், புல எண், சாலைகள், மனைகளின் பரப்பளவு, வழிகாட்டி மதிப்பு போன்ற மனைப்பிரிவு தொடர்பான தகவல்களைப் பெற பயன்படும்.

3. தமிழ்நாட்டில் ஏதேனும் ஒரு நகரில் உள்ளூர் திட்டப் பகுதிக்கான நிலச்சேர்ம பகுதி வளர்ச்சித் திட்டம் (LAND POOLING AREA DEVELOPMENT SCHEME) செயல்படுத்தப்படும்

தமிழ்நாட்டில் தற்பொழுது முழுமைத் திட்டம் தயாரிக்கப்பட்டுவரும் ஏதேனும் ஒரு நகரில் முன்மாதிரியாக, நிலச்சேர்ம பகுதி வளர்ச்சித் திட்டம் உருவாக்கப்படும். இத்திட்டம் திட்டமிட்ட மற்றும் முறையான வளர்ச்சியை உறுதி செய்யும் விதத்தில், தனிநபர்களிடமிருந்து நிலங்களை ஒருங்கிணைத்து ஒவ்வொரு மனைக்கும் சாலை வசதியை ஏற்படுத்துவதுடன் பொது உள்கட்டமைப்பு வசதிக்காகவும் நிலம் ஒதுக்கீடு செய்யப்படும்.

4. முழுமைத் திட்ட நில உபயோக வகைப்பாடுகளை பொதுமக்கள் அறிந்து கொள்ள "நிலப்பயன் தகவல் அமைப்பு" (LAND USE INFORMATION SYSTEM) உருவாக்கப்படும்

முழுமைத் திட்ட நில உபயோக வகைப்பாடுகளை பொதுமக்கள் அறிந்துகொள்ள "நிலப்பயன் தகவல் அமைப்பு" தளம் உருவாக்கப்படும். இம்மதிப்புமிக்க தகவல்கள் நிதி முதலீடு, குடியிருப்பு, வணிகம், தொழில் மற்றும் விவசாய நிலம் சார்ந்த தொழில் முதலீடுகளை அதிகரிக்க வழிவகை செய்யும்.

5. 300 சதுர மீட்டருக்குள் கட்டட பரப்பளவு கொண்ட, 14 மீ. உயரத்திற்குள் உள்ள அனைத்து வணிக கட்டடங்களுக்கும் கட்டட முடிவு சான்று பெறுவதிலிருந்து விலக்களித்தல்

சிறு வணிகர்கள் பயன்பெறும் வகையில் 300 சதுர மீட்டர் மொத்த கட்டட பரப்பளவிற்குள், 14 மீட்டர் உயரத்திற்குள் அமையும் வணிகக் கட்டடங்களுக்கு, கட்டட முடிவுச் சான்றிதழ் பெறுவதிலிருந்து விலக்களிக்கப்படும்.

6. தமிழ்நாடு வீட்டுவசதி வாரியத்தால், ஈரோடு மாவட்டம், சம்பத் நகரில் 108 அடுக்குமாடி குடியிருப்புகள் கட்டப்படும்

தமிழ்நாடு வீட்டுவசதி வாரியத்தால், ஈரோடு மாவட்டம், சம்பத் நகர் திட்டப் பகுதியில், பொது மற்றும் தனியார் பங்களிப்புடன், 3.741 ஏக்கர் நிலப்பரப்பில் வணிக வளாகம் மற்றும் நவீன வசதிகள் கொண்ட 108 அடுக்குமாடி குடியிருப்புகள் கட்டப்படும்.

7. திருவண்ணாமலை மாவட்டம் மற்றும் மதுரை மாவட்டத்திலுள்ள 2 கூட்டுறவு வீட்டுவசதி சங்கங்களுக்கு சொந்தமான நிலங்களில் எரிபொருள் நிரப்பும் நிலையங்கள் (பெட்ரோல் பங்க்) ரூ.130.00 இலட்சம் செலவில் அமைக்கப்படும்

திருவண்ணாமலை மாவட்டத்திலுள்ள சி.1603, திருவண்ணா மலை கூட்டுறவு வீடு கட்டும் சங்கம் மற்றும் மதுரை மாவட்டத்திலுள்ள ஏ 1929 திருநகர் கூட்டுறவு வீடு கட்டும் சங்கம் ஆகிய 2 கூட்டுறவு வீட்டுவசதி சங்கங்களுக்கு சொந்தமான நிலங்களில் எரிபொருள் நிரப்பும் நிலையங்கள் (பெட்ரோல் பங்க்) ரூ.130.00 இலட்சம் செலவில் அமைக்கப்படும்.

8. சென்னை, கோயம்புத்தூர், திருச்சி, சேலம் மற்றும் தஞ்சாவூர் மாவட்டங்களிலுள்ள 10 கூட்டுறவு வீட்டுவசதி சங்கங்களில் ரூ.57.00 இலட்சம் திட்ட மதிப்பீட்டில் பாதுகாப்பு அறையுடன்கூடிய இரும்பு பெட்டகங்கள் அமைக்கப்படும்

சென்னை, கோயம்புத்தூர், திருச்சி, சேலம் மற்றும் தஞ்சாவூர் மாவட்டங்களிலுள்ள, 10 கூட்டுறவு வீட்டுவசதி சங்கங்களில், ரூ.57.00 இலட்சம் திட்ட மதிப்பீட்டில், நகைக் கடன் வழங்குவதற்கு ஏதுவாக பாதுகாப்பு அறையுடன்கூடிய இரும்பு பெட்டகங்கள் அமைக்கப்படும்.

9. செங்கல்பட்டு மற்றும் மதுரை மாவட்டத்திலுள்ள 2 கூட்டுறவு வீட்டுவசதி சங்கங்களுக்குச் சொந்தமான நிலத்தில் ரூ.70.00 இலட்சம் திட்ட மதிப்பீட்டில் வணிக வளாகங்கள் கட்டப்படும்

செங்கல்பட்டு மாவட்டத்திலுள்ள, செங்கல்பட்டு கூட்டுறவு வீட்டுவசதி சங்கம் மற்றும் மதுரை மாவட்டத்திலுள்ள ஏ 1929 திருநகர் கூட்டுறவு வீடு கட்டும் சங்கம் ஆகிய இரண்டு கூட்டுறவு வீட்டுவசதி சங்கங்களுக்குச் சொந்தமான நிலத்தில் ரூ.70.00 இலட்சம் திட்ட மதிப்பீட்டில் வணிக வளாகங்கள் கட்டப்படும்.

10. சென்னைப் பெருநகரப் பகுதிக்கு புதிய வாகன நிறுத்தக் கொள்கை உருவாக்கப்படும்

சென்னைப் பெருநகர பகுதியில் பெருகிவரும் வாகனங்களின் எண்ணிக்கையையும் அதன்பால் ஏற்படும் வாகன நிறுத்த தேவையை அறிந்து திறம்பட மேலாண்மை செய்திட புதிய வாகன நிறுத்தக் கொள்கை உருவாக்கப்படும்.

11. மாநிலத்தின் போக்குவரத்து திட்டமிடல் திறனை மேம்படுத்தும் வகையில் அண்ணா பல்கலைக்கழகத்தில் புதிய பாடப் பிரிவாக கட்டடக் கலை மற்றும் திட்டமிடல் பள்ளியில் போக்குவரத்து திட்டமிடல் பட்ட மேற்படிப்பு (M.PLAN) அறிமுகப்படுத்தப்படும்

அண்ணா பல்கலைக்கழகத்தின் கட்டடக் கலை மற்றும் திட்டமிடல் பள்ளியில் (SCHOOL OF ARCHITECTURE AND PLANNING) போக்குவரத்து திட்டமிடல் பட்ட மேற்படிப்பு (M. PLAN-TRANSPORTATION PLANNING) அறிமுகப்படுத்தப்படும்.

**அறிவிப்புகள்**

**மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை (உள் துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை)**

1. கள்ளச்சாரயம் காய்ச்சுதல் மற்றும் கள்ள மதுபான விற்பனையில் ஈடுபட்டு, சிறைத்தண்டனை பெற்று விடுதலையாகி மனம் திருந்தியவர்க ளுக்கு மறுவாழ்வு நிதி வழங்குதல்

தமிழ்நாட்டில் கள்ளச்சாராயத்தை முற்றிலுமாக ஒழிக்கவும், கள்ளச்சரரயம் காய்ச்சுதல், கள்ளத்தனமாக அயல்நாட்டு மதுபானங்கள், தெளிந்த சாராவி ஆகியவற்றை கடத்துதல், வைத்திருத்தல் மற்றும் விற்பனை செய்தல் போன்ற குற்றச் செயல்களில் ஈடுபட்டு, சிறைத்தண்டனை பெற்று விடுதலையாகி மனம் திருந்தியவர்கள் மீண்டும் குற்றச் செயல்களில் ஈடுபடாமல் தடுக்க அவர்களுக்கு மறுவாழ்வு வழங்க வேண்டும். அவர்களது வாழ்வாதாரத்தை மேம்படுத்தும்பொருட்டு, அவர்களை சுய தொழில்களில் ஈடுபடுத்தி அதன்மூலம் இவர்களின் சமூகப் பொருளாதார நிலை மற்றும் வாழ்வாதாரத்தை உயர்த்த, நபர் ஒருவருக்கு ரூ.50,000/ மானியமாக வழங்குவதற்கு ஏதுவாக ரூ.5.00 கோடி மறுவாழ்வு நிதி ஒதுக்கீடு செய்யப்படும்.

மேலும், தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக் கழகம், தமிழ்நாடு ஆதி திராவிடர் வீட்டு வசதி மற்றும் மேம்பாட்டுக் கழகம், தமிழ்நாடு மகளிர் நல மேம்பாட்டு நிறுவனம் மற்றும் தமிழ்நாடு நகர்ப்புர வாழ்வாதார இயக்கம் ஆகிய துறைகளுடன் இணைந்து அவர்களுக்கான திறன் மற்றும் வாழ்வாதாரத்தை மேம்படுத்த ஒருங்கிணைந்த திட்டம் செயல்படுத்தப்படும்.

2. கள்ளச்சாராயம், போலி மது பானங்கள் மற்றும் போதைப் பொருட்களுக்கு எதிராக தீவிரமான விழிப்புணர்வு பிரச்சாரங்கள் நடத்துதல்

தமிழ்நாட்டில் கள்ளச்சாராயம் அருந்துதல் மற்றும் போதைப் பொருட்கள் உட்கொள்வதால் ஏற்படும் தீமைகள் குறித்து பொதுமக்கள் மற்றும் இளைஞர்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்காக வருவாய்த் துறை, காவல் துறை, போக்குவரத்துத் துறை, பள்ளிக் கல்வித் துறை மற்றும் உயர் கல்வித் துறை ஆகிய துறைகளுடன் இணைந்து மாவட்டந்தோறும் விழிப்புணர்வு பிரச்சாரங்கள் மற்றும் சிறப்பு முகாம்கள் நடத்துவதற்கு ரூபாய் 5.00 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்படும்.

3. மாநிலம் முழுவதும் உள்ள 45 மதுவிலக்கு சோதனைச் சாவடிகளில் வாகன பதிவெண் அடையாளம் காணும் தானியங்கி கண்காணிப்பு கேமராக்களை (ANPR) நிறுவுதல்

கள்ளச்சரயம், எரிசாராயம், பிற மாநில மதுபானங்கள் மற்றும் போதைப் பொருட்கள் ஆகியவற்றின் கடத்தலைத் தடுத்திடவும், தீவிர கண்காணிப்பினை மேற்கொள்ளவும் மாநிலம் முழுவதுமுள்ள 45 மதுவிலக்கு சோதனைச் சாவடிகளில் வாகன பதிவெண் அடையாளம் காணும் தானியங்கி கண்காணிப்பு கேமராக்கள் (AUTOMATIC NUMBER PLATE RECOGNITION CAMERAS) நிறுவவும், அவற்றின் செயல்பாட்டினை சென்னையிலுள்ள மதுவிலக்கு அமலாக்கப் பிரிவின் தலைமையகத்திலிருந்து கண்காணிக்கும் வகையில் கண்காணிப்பு மையம் அமைக்கவும் ரூபாய் 5.60 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்படும்.

4. அமலாக்கப் பணியகம்-குற்றப் புலனாய்வுத் துறையின்கீழ் இயங்கும் மத்திய நுண்ணறிவுப் பிரிவில் பணிபுரியும் காவல் அலுவலர்களுக்கு தொழில்நுட்பக் கருவிகள் வழங்குதல்

அமலாக்கப் பணியகம்-குற்றப் புலனாய்வுத் துறையின்கீழ் இயங்கும் மத்திய நுண்ணறிவுப் பிரிவில் பணிபுரியும் காவல் அலுவலர்கள் நுண்ணறிவு அறிக்கைகளை மந்தனமாக தயார் செய்ய வேண்டியுள்ளதால் அவகளுக்கு மடிக்கணினி, இணைய இணைப்பு அட்டை மற்றும் தொழில்நுட்பக் கருவிகள் ரூபாய் 18.50 இலட்சம் செலவில் வழங்கப்படும்.

இவ்வாறு அமைச்சர் சு.முத்துசாமி பதிலுரையாற்றினார்.